**செய்தி வெளியீடு எண் : 2161** **நாள் : 30.11.2022**

# செய்தி வெளியீடு

யூனிசெப் (UNICEF) நிறுவனம் மற்றும் 1098 சைல்டு லைன் (Child Line) சார்பில், கொரானா பெருந்தொற்று காலத்தில் குழந்தைகள் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடுவது குறைந்ததை கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு விளையாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், அவர்களை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்கும் வகையிலும் 1.12.2022 அன்று சென்னையில் ISL Chennaiyin FC கால்பந்து அணி மற்றும் பள்ளிக் குழந்தைகளை உள்ளடக்கிய Childline FC அணிக்குமான கால்பந்து கண்காட்சி போட்டி (Exhibition Match) நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பள்ளிக்குழந்தைகள் அணிக்கான விளையாட்டு சீருடையை (JERSEY) மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள் இன்று (30.11.2022) அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்வில் 1098 சைல்டு லைன் முதுநிலை திட்ட அலுவலர் திரு. ஆண்ட்ரூஸ் ஆபிரகாம் மற்றும் யூனிசெப் சார்பில் திருமதி. சுபா ஜெயராம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in